சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண். IA 369 of 2019 in OS 110 of 2011

2021 ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின் /பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் R.W.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சிராஜுதீன் | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u> (சம்மனின் பெயரில்)

24-02-2021

நான் சம்மன் பெயரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் நல்லூர் முகைதின் ஆண்டவர் பள்ளிவாசலில் கணக்கராக பணிபுரிகிறேன். எங்கள் ஜமாத்தில் திருமணம் மற்றும் விவகாரத்து பதிவு செய்யப்படும். அருப்புக்கோட்டை காட்டுபாவா சாகுல் ஹமீது மகன் ரசாக் என்பவரை பற்றி எனக்கு தெரியாது. சாட்சி தாக்கல் செய்த திருமண பதிவு நகல் சா.சா.ஆ.6 ஆகும். சா.சா.6 ன் படி மணமகன் பெயர் அப்துல் ரசாக் என்றும் மணமகள் பாத்திமா பீவி என்றும் காணப்படுகிறது. குறிப்பிட்ட ஜமாத்தை சேர்ந்தவர்களுக்கு மட்டுமே நிக்கா பதிவு செய்யப்படும். எனவே அப்துல் ரசாக் பாத்திமா பீவி எங்கள் ஜமாத்தை

சேர்ந்தவர்களா என்றால் எனக்கு தெரியாது. சா.சா.6 ன் படி மேற்சொன்ன இருவர் ஜமாத்தை சேர்ந்தவர்கள் என்று கூறினார்கள். சா.சா.ஆ.6 ன்படி மேற்சொன்ன இரண்டு நபர்களுக்கும் 05-09-1993 திருமணம் நடந்தது. ஜமாத்து வ ழக்கம் படி விவாகரத்து செய்யும் கணவர் மனைவியிடம் மூன்று முறை ஒவ்வொரு மாத இடைவெளியிலும் தலாக் அறிவிப்பு செய்யவேண்டும். தலாக் அறிவிப்பு பதிவு தபாலில் அனுப்பப்பட வேண்டும். பதிவு தபால் நகல் ஜமாத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அப்துல் ரசாக் மற்றும் பாத்திமா பீவி தலாக் ஆவணம் நான் கொண்டுவரவில்லை. இத்தாக் கால தொகையை கணவர் மனைவிக்கு கொடுக்க வேண்டும். அப்துலாவை எனக்கு நேரடியாக தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பில்)</u>**

அப்துல் ரசாக் மற்றும் பாத்திமா பீவி திருமணம் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். அப்துல் ரசாக் பாத்திமா பீவியை வேண்டாம் என்று தலாக் சொல்லி பணம் கட்டிய தீர்மானம் நகல் சா.சா.ஆ.7 ஆகும். சாகுல் ஹமீது தன் முன்னால் மருமகளுக்கு 5 ஆயிரம் செலுத்தியதற்கான தீரமானம் நகல் சா.சா.ஆ.8 ஆகும். எங்கள் ஜமாத்தில் பணம் கட்டிவிட்டால் விவகாரத்து ஆகிவிட்டதாக வழக்கம். அப்துல்லா மற்றும் பாத்திமா பீவி திருமணம் பதிவு நகல் சா.சா.ஆ.9 ஆகும்.

**<u>மறு விசாரணை</u>**

சா.சா.ஆ.7 நிக்காகாக என்பது திருமணத்திற்காக என்பது பொருள் என்றால் ஆமாம். இது சாகுல் ஹமீது ஆவணம் அப்துல் ரசாக்கை கட்டுப்படுத்தாதா என்று எனக்கு தெரியாது. சா.சா.ஆ.8 அப்துல் ரசாக் சம்மந்தப்பட்ட ஆவணம் இல்லையா என்று எனக்கு தெரியாது.

அப்துல் ரசாக் மனநிலை பாதிக்கப்பட்டவரா இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது நான் பார்த்ததே இல்லை.

(1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)